
மினி தொடர்

# ரம்பா ஊர்வசி மேனகா

சென்னையில் இருந்து விமானத்தில் பறந்து இரண்டரை மணி நேரத்தில் அந்தமானை அடைவதற்குப் பதிலாக, இரண்டரை நாள் கப்பல் பயணத்தை மேற்கொண்டேன் என்றால் ஓரே காரணம் வர்ஷா.



1

சுபா



என் புது மனைவி! மெத், மெத் படுக்கைகளுடன், அட்டாச்ட் பாத்ரூம் கொண்ட கப்பல் அறைக்குள் அடியெடுத்து வைத்தவுடனேயே, தேனிலவு ஆரம்பித்து விட்டது.

வர்ஷா உடுத்தியிருந்தாலும், இல்லாவிட்டாலும் கிண்! சீஸரின் மனைவி சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவள். வர்ஷா வர்ணனைக்கு அப்பாற்பட்டவள்! வர்ஷா என்றால் மழையாம்! ஒரே இன்பமழை!

அந்தமானின் ப்ளேர் துறைமுகத்தில் கப்பல் நங்கூரம் பாய்ச்சிய போது, 'பயணம் அதற்குள்ளாகவா முடிந்து விட்டது?' என்ற ஏக்கக் கேள்வியுடன் கரை இறங்கினேன்.

டாக்ஸியில் மூன்றாவது நிமிஷம் டீல் ஹவுஸ். விடுதி அறையிலேயே மொத்தத் தேனிலவு நாட்களையும் கழிக்க உத்தேசித்திருந்தேன். வர்ஷா அந்த விளையாட்டுக்குச் சம்மதிக்கவில்லை.



ராத்திரியில் மட்டும்தான் அறைக்குள் நுழைவேன் என்று சூளுரைத்து, வெளிநடப்புச் செய்து விட்டாள்.

எனவே...

அடுத்த நான்கு பகல்களிலும் அப்பாவிப் பயணிகளாக ஊர் சுற்றினோம். கடலில் ஃபைபர் படகில் மிதந்து பவளச் செடிகளை, 'ஆவ்ஸம்' என்று ரசித்தாள். மர ஆலையில் பெரிய மரங்களை யானைகள் உருட்டிச் செல்வதை 'வாவ்' என்று பிரமித்தாள். ராஸ் ஐலண்டில் சுவர்களை மூடிப் படர்ந்திருந்த கொடிகளை 'ஐய்ய்...யோ' என்று வியந்தாள். அந்தமானில் மட்டுமே சிறகடிக்கும் மெகாபோட் பறவைகளை 'ச்சோ...ச்வீட்...' என்று கொஞ்சினாள்.

பீனிக்ஸ் துறைமுகத்திலிருந்து இரண்டரை மணி நேரக் கடல் பயணம் செய்து ஹாவ்லாக் தீவை அடைந்தோம். கடல் நீர் பளிங்கு! முந்நூறு அடி தூரம் வரைக்கும் வர்ஷாவின் இடுப்பளவுதான் ஆழம். 'உஷ்ஷ்' என்று சீறும் அலை கிடையாது. 'விர்ரும்' என்று பயமுறுத்தும் காற்று கிடையாது.

டூ பீஸ்ும், சிங்கிள் பீஸுமாக ஏகப்பட்ட ஜோடிகள் ஜலக்கிரீடினார்கள். நாங்களும்!

களைத்து, கரை சேர்ந்து, தொங்கும் வலைப் படுக்கையில் ஒயிலாகச் சாய்ந்து, ஜூஸை உறிஞ்சியபடி ஒரு கண்ணை மூடி, ஒரு கண்ணைத் திறந்து, "மகேஷ்,, நீங்க யாரையாவது லவ் பண்ணியிருக்கீங்களா?" என்று எல்லா புது மனைவிகளும் கேட்கும் அதே கேள்வியை வர்ஷா கேட்டாள்.

திகைத்தேன். தடுமாறினேன்.

"அட... செக்ஸ் எக்ஸ்பீரியன்ஸ் இருக்குன்னா கேட்டுட்டேன்? இவ்வளவு யோசிக்கிறீங்க...? கம்மான்...!"

விஜியை, அருணாவை, சுஜாவை நினைத்துக் கொண்டேன். மானுக்குப் போல மிரண்ட விழிகள். மார்பு மேட்டில் புரண்டு இடுப்பைத் தொட்டு ஊசலாடும் பின்னல். கவர்ச்சியான புன்னகை.

"எனக்குள்ள ஒரு லவ் ஸ்டோரி ஒளிஞ்சிட்டிருக்கு. அதுல நான் இருக்கேன். ப்ளஸ் என்னோட மூணு ஃப்ரெண்ட்ஸ் இருக்காங்க... வாழ்க்கைல

**"ஏம்பா! வேலைக்குச் சேர்ந்த புதுசுல நல்லா வேலை செய்த... இப்ப என்ன தூங்கற...?"**

**"அப்ப புது இடம் தூக்கம் வர்லை சார். இப்ப பழகிப் போச்சு..."**

**- வி.சாரதி டேச்சு**

எதைப் பத்தி நெனைக்கவே கூடாதுன்னு இருந்தேனோ அதை ஞாபகப்படுத்திட்டே..." என்றேன் பிசிறான குரலில்.

போர்ட் ப்ளேருக்குத் திரும்பினோம். இரண்டரை மணி நேரமும் வாயடைத்துப் போயிருந்தேன். நினைவை ஹோண்டா பாபுவும், மைனர் கோபியும், ஐயப்பனும் ஆக்கிரமித்திருந்தார்கள்.

ஒரே அறையில் தங்கி, ஒரே பாரில் குடித்து, ஜாலியோ, ஜாலியாகத் திரிந்த அந்த நாட்களை மறக்க முடியவில்லை. திடீரென்று ஒரு மாயவித்தையில் சிக்கி மூன்று பேருமே காணாமல் போனார்கள். எங்கே? எப்படி இருக்கிறார்கள்? உயிரோடா? இல்லையா?

"கோபமா மகேஷ்?" என்று கொஞ்சிக் கேட்டாள் வர்ஷா.



"சேச்சே.. எனக்குத்தான் மூட் ஆஃப் ஆய்டிச்சி.."

போர்ட் ப்ளேர் கடைத்தெருவில் சுற்றினோம். விடுதிக்குப் போவதற்கு முன் டின்னரை முடித்துக் கொள்ளலாம் என்று ஒரு ஹோட்டலில் நுழைந்தோம்,

சூப்பர்வைசர் எங்களை அடைகாத்து ஏ.ஸி.க்குள் அழைத்துச் சென்றார். நான் உட்கார்ந்த இடத்தில் இருந்து கல்லா தெரிந்தது. வாசல் தெரிந்தது.

வர்ஷாவை ஆர்டர் பண்ணச் சொல்லிவிட்டு வெற்றாக மெனு கார்டை வெறித்தேன்.

"ஒன் பை டூ சூப் குடிக்கலாமா? ஸ்வீட் அண்ட் ஸோர்?" என்ற வர்ஷாவின் குரல் கலைத்தது. நிமிர்ந்தேன்.

தற்செயலாக பார்வை கல்லாவை நோக்கியது. அங்கே ஹோட்டல் முதலாளி கொடுத்த பணத்தை ஹாண்ட் பேகில் திணித்துக் கொண்டு, சாலையை நோக்கிப் படிகளில் இறங்கியது குமுதா ஆன்ட்டிதானே?

எந்த குமுதா ஆன்ட்டியை வாழ்க்கையில் இன்னொரு முறை பார்க்க முடியுமா என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தேனோ அதே குமுதா ஆன்ட்டிதானே?



"நயன்தாரா மாதிரி ஒரு பொண்ணைப் பாருங்க தரகரே.."

"கைல பழைய காதலனோட பேரை பச்சை குத்தியிருப்பா... பரவாயில்லையா?"

- பர்வீன் யூனுஸ்

என்னை மறந்தேன். வர்ஷாவை மறந்தேன். வாசலை நோக்கிப் பாய்ந்தேன். ஏ.ஸி. அறையின் கண்ணாடிக் கதவு பைத்தியக்காரத்தனமாகத் திறந்து என்னை உருட்டியது. எழுந்தேன். படிகளில் இறங்கினேன். சாலையை அடைந்தேன்.

பார்த்தேன். "குமுதா ஆன்ட்டி.." என்று கத்தினேன். ஆன்ட்டி திரும்பவில்லை. அருகில் வந்து நின்ற ஒரு டாக்ஸியின் கதவைத் திறந்தாள். ஏறினாள்.

ஓடினேன். டாக்ஸியை நெருங்குவதற்குள் அது சீறிப் பாய்ந்தது. எக்ஸாஸ்ட் புகை என் முகத்தில் அடர் கருமையாய்ப் படிந்தது.

தோளில் கை படர்ந்தது. திரும்பினேன். வர்ஷா! "இந்தாங்க.." என்று ஒரு துண்டுச் சீட்டை நீட்டினாள்.

"என்னது?"

"அந்த ஆன்ட்டியோட அட்ரஸ்.." என்று, விலகிச் சென்று கொண்டிருந்த டாக்ஸியைக் காட்டினாள்.

"எப்படி வர்ஷா?" என்று பிரமிப்புடன் கேட்டேன்.

"அந்த ஆன்ட்டி ஹோட்டல் முதலாளி கூட சிரிச்சிப் பேசிட்டிருந்ததைப் பார்த்தேன். அவர் கிட்டப் போய் ஆன்ட்டி உங்களுக்கு உறவுன்னு சொல்லி அட்ரஸ் கேட்டேன். குடுத்துட்டாரு.."

"ஹைய்யோ.. ஒன்னை அப்படியே தூக்கி.."

"அதெல்லாம் ரூமுக்குப் போய். இப்ப ஆன்ட்டி வீடு. டாக்ஸி.."

அஞ்சலகத்தை ஒட்டித் திரும்பிய சிறு தெருவில் அந்த வீடு இருந்தது. வளாகத்தில் செடிகள், கொடிகள், வினோத மூலிகை


ஜூன் 1 கடைகளில்...
13-ம் ஆண்டு சிறப்பிதழ்!
6 புதிய தொடர்கள்
168 பக்கங்கள்! 2 புத்தகங்கள்!
குமுதம் சிநேகிதி
ஜூன் 1-15, 2013

மணம் பரப்பிய பூக்கள்.

கதவு மூடியிருந்தது. காலிங் பெல் அழுத்தினேன். வீட்டுக்குள் இசை. கதவு திறக்க, குமுதா ஆன்ட்டி.

முகத்தில் திகில் படர்ந்து மறைந்தது. "யாரு வேணும்?" என்று இறுக்கமான முகத்துடன் கேட்டாள்.

"விளையாடாதீங்க ஆன்ட்டி.. ஹோட்டல்ல விசாரிச்சிட்டுத்தான் வரோம். இது வர்ஷா. ஒய்ஃப்."

அதற்கு மேலும் நாடகமாடாமல், "உள்ள வாங்க" என்றாள் ஆன்ட்டி.

சிறு கூடம். கலைப்பொருட்கள். சோபா செட். சுவரில் ஏதாவது புகைப்படம் இருக்கிறதா என்று தேடினேன். ஹூஹூம்! உட்கார்ந்தோம்.

என்ன வேலையில் இருக்கிறேன்? இவ்வளவு அழகான வர்ஷா என்ன படித்திருக்கிறாள்? வேலைக்குப் போகிறாளா? எப்போது கல்யாணம் நடந்தது? குமுதா ஆன்ட்டி டீ கொண்டு வந்து கொடுத்து விட்டு இது போல் என்னென்னவோ விசாரித்தாள்.

"அதெல்லாம் விடுங்க ஆன்ட்டி.. விஜி, அருணா, சுஜா, சந்தியா எங்கே?"

"அதைப் பத்தி எதுக்கு இப்போ?"

"எதுக்கா? மூணு பேரோட உயிர் உங்களுக்கு அவ்வளவு அசால்டா இருக்கா ஆன்ட்டி?" என்றேன் சற்றே சீற்றமான குரலில்.

"இரு. கப்பை வச்சிட்டு வரேன்." என்று குமுதா ஆன்ட்டி உள்ளே போனாள்.

மேஜை மேல் அந்தமானைப் பற்றிய ஒரு புத்தகம். எடுத்துப் புரட்டினேன்.

"விஜி, அருணா, சுஜா, சந்தியா.. யாருங்க இவங்கல்லாம்? உங்க லவ் ஸ்டோரியோட ஹீரோயின்ஸா?" என்று வர்ஷா கேட்டாள்.

புத்தகத்தில் ஆழ்ந்திருந்தவன் நிமிர்ந்தேன். வர்ஷா மீண்டும் 'அதே கேள்வியைக் கேட்டாள். அது இருக்கட்டும். கோப்பையை வைத்து விட்டு வருகிறேன் என்று உள்ளே போன ஆன்ட்டி ஏன் இன்னும் திரும்பவில்லை?

உள்ளிருந்து மயில் அகவல் போல் அமானுஷ்யமாக ஒரு சத்தம் கேட்டது. திகிலுடன் உள்ளறை நோக்கி ஓடினேன். வர்ஷாவும் ஓடி வந்தாள்.

சமையல் அறையில் குமுதா ஆன்ட்டி தரையில் அசௌகரியமான கோணத்தில் விழுந்து கிடந்தாள். கண்கள் செருகி இருந்தன. வாயில் நுரை தள்ளியிருந்தது.

(தொடரும்)

மினி தொடர்

# ரம்பா ஊர்வசி மேனகா


ஆம்புலன்ஸ். ஆஸ்பத்திரி. டாக்டரிடம் ஆன்ட்டி குடித்திருந்த பூச்சி மருந்து குப்பியைக் காட்டினேன். "நர்ஸ். ஸ்டொமக் வாஷ். குயிக்.." என்றார் டாக்டர். நர்ஸ் ஓடினாள்.

வர்ஷா திகிலுடன் நின்றிருந்தாள். எனக்கு உள்ளுக்குள் உதறியது. பழைய குப்பையைக் கிளறி என்ன ஆகப்போகிறது?

சந்தியாவைப் பார்த்த அந்த முதல் நாள்...!

நான் சுயம்பு இல்லை! கணபதி அக்ரஹாரத்தைச் சேர்ந்த ரிடையர்ட் ஸ்டேஷன் மாஸ்டர் வேங்கடராமனுக்கும், மரகதவல்லிக்கும் வாய்த்த ஒரே தவப்புதல்வன், மஹேஷ்வரன்!

திருவல்லிக்கேணி மேன்ஷனில் ஓர் அறையை மூவரோடு (ஹோண்டா பாபு, மைனர் கோபி, ஐயப்பன்) பகிர்ந்து கொண்டு மெஸ்ஸில் பசியாறிக் கொண்டிருந்தேன்.



சுபா

எம்.ஏ. ஜர்னலிசம் எனக்கு ஒரு நாளிதழ் அலுவலகத்தில் வேலை பெற்றுத் தந்திருந்தது.

குளிரான ஒரு மார்கழி காலையில் வாக்கிங் சென்றேன். பஜனை கோஷ்டி, பேப்பர் டையன்கள்,

டீக்கடைகளில் அன்றலர்ந்த வடைகள், கோலம் போடும் பெண்கள்.

இளமை பொங்கிய அவர்களைப் பார்த்த கணத்தில் மஸ்தாகி விட்டேன். அங்கிருந்த ஆண்களோடு ஐக்கியமாகி கோலங்களின் வளைவுகளையும், லைவ் வளைவுகளையும் ரசித்தேன்.

குத்துக்காலிட்டு அமர்ந்தும், எழுந்து நின்று குனிந்தும், சுறுசுறுப்பாகக் கோலமிட்டுக் கொண்டிருந்த அந்த இளம் கன்னி என்னை வெகுவாகக் கவர்ந்தாள்.

அவ்வப்போது நிமிர்ந்து நெற்றியில் புரண்ட 'எஸ்' வடிவிலான கொத்து முடியைப் பின்னுக்குத் தள்ளி விட்டுக்கொண்டாள். விரல்கள் தரைக்கான்வாஸில் விளையாடின.

அவளை மட்டும் நான் ரசித்ததை அவளது உள்ளுணர்வு சொல்லியிருக்கவேண்டும். திடீரென்று நிமிர்ந்தாள். என்னைப் பார்த்தாள். கவிஞர்கள் கொண்டாடும் மான் விழிகள்!

'கோலம் சூப்பர்' என்று சின்முத்திரை காட்டி உதடுகளை அசைத்தேன். 'தாங்க்ஸ்' என்று உதடுகளை அசைத்தாள்.

அந்தக் கணத்திலேயே அவளைக் காதலிக்க ஆரம்பித்தேன். அன்று



நடந்த கோலப்போட்டியில் அவளது கோலம்தான் பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

பரிசு வாங்கியவுடன் அவளிடம் வாழ்த்துக்களைத் தெரிவிக்கலாம் என்று பார்த்தால், மாயமாகி இருந்தாள்.

மறுநாள் காலையும் வந்திருந்தாள். கோலமிட்டுக் கொண்டிருந்தாள். என்னைப் பார்த்து விட்டாள். 'சூப்பர்' என்றேன். 'தாங்க்ஸ்' என்றாள். அன்றைக்கும் அவளுக்குத்தான் பரிசு. அன்றைக்கும் காணாமல் போனாள்.

அடுத்தடுத்த நாட்களிலும் அவளுக்கே பரிசு கிடைத்துக் கொண்டிருந்தது. அத்தனை நாட்களும் அவளை என்னால் பிடிக்க முடியவில்லை.

இறுதி நாளன்று மெகா பரிசு. மிக்ஸி! அவளை உற்சாகப்படுத்துவதற்காக போட்டி தொடங்கும் முன்பே போய்ச் சேர்ந்து விட்டேன்.

போட்டி ஆரம்பித்ததும் அவளுக்கு அருகில் போய் நின்று கொண்டேன். அந்தக் குளிரிலும் நெற்றியில் நீர் முத்துக்கள்!

"எதுக்குய்யா தோசை முழுவதும் மிளகுத் தூளா இருக்குது?"

"நீங்கதானே 'பெப்பர்' ரோஸ்ட் கேட்டீங்க?"

"நாசமாப் போச்சு நான் கேட்டது பேப்பர் ரோஸ்ட்டுய்யா!"

- வி.சகிதா முருகன்



தாவணியால் துடைத்துக் கொண்டாள்.

ஃப்ளாஸ்கில் நல்ல காப்பி எடுத்துப் போயிருந்தேன். காகித டம்ளரில் ஊற்றி நீட்டினேன். நிமிர்ந்தாள். என் கண்களில் தெரிந்த கெஞ்சலால் தம்ளரை வாங்கிக் குடித்தாள்.

கோலத்தில் ஆழ்ந்தாள். முடித்தவுடன் என்னருகே வந்து நின்று 'திருப்தியாக வந்திருக்கிறதா?' என்று பார்த்தாள். அவளது தோள்பட்டை எனது தோள் பட்டையை உரசியது. அவளது தொடை எனது தொடையை உரசியது. இதுவரை அனுபவிக்காத சொர்க்கம்!

"உங்க பேரென்ன?"

"சாவித்திரி, சந்தியா, சகுந்தலா, சம்யுக்தா.. இதுல ஏதோ ஒண்ணுன்னு வச்சிக்குங்களேன்..." என்று சிரித்தாள்.

முதற்பரிசு பெற்ற கோலத்தின் எண்ணை அறிவித்தார்கள். அவளுடையதுதான்! என்னிடம், "நீங்க வந்தீங்கன்னா ப்ரைஸைத் தட்டிடுவேன்னு நெனைச்சேன். உங்களுக்கு நல்ல கைராசி. தாங்க்ஸ்.." என்றாள். மிதந்தேன்.

அன்றைக்கு எப்படியும் அவளது பெயரையும், முகவரியையும் தெரிந்து கொள்ளாமல்

போவதில்லை. 'கோல மாவை வைத்து விட்டு வருகிறேன்' என்று அருகில் இருந்த ஒரு மடத்துக்குள் நுழைந்தாள். வரவே இல்லை.

மடத்துக்குள் நுழைந்தேன். கூடத்துக்கும், முற்றத்துக்கும் இடையில் நடைபாதை உள் நோக்கிச் சென்று, மடத்தின் பின்புற வாசலை அடைந்தது.

அதற்கு வெளியே மாடுகளும், எருமைகளும் கட்டிப் போடப்பட்டிருந்த இன்னொரு தெரு. எவ்வளவு எளிதாக ஏமாந்திருக்கிறேன்!

இரண்டு மாதங்கள் பைத்தியக்காரனைப் போல் அந்தப் பிரதேசத்தைச் சுற்றி வந்தேன். அவள் சென்ற திசையைக் கூட கண்டுபிடிக்க முடியவில்லை. ஒரு வேளை ஊர்வசி, ரம்பா, மேனகா போல் தேவலோகத்திலிருந்து வந்து எனக்கு மட்டும் காட்சி கொடுத்து மறைந்து விட்ட திலோத்தமையோ!

ஹோண்டா பாபுவும், மைனர் கோபியும், ஐயப்பனும் பரிதாபப்பட்டார்கள். பிராந்தியும், பீரும் வாங்கிக் கொடுத்தார்கள்.

ஆறுமாதம் கழிந்தது. காதல் கதைகளிலிருந்து ராமகிருஷ்ணர், சாயிபாபா இத்யாதிகளுக்குத் தாவியிருந்தேன்.

ஒரு காலை நேரம்.

"அந்த புக்கிங்க்கு ஞாபகமறதி வியாதி."

"ஏன்?"

"சியர் கேர்ள்ஸ் சரியா ஆடாம இருக்க பணம் கொடுத்திருக்காரே..."

- வி.சாரதி டேச்சு



மெஸ்ஸில் சாப்பிட்டு விட்டு, காப்பிக்குப் பின்னர் சிகரெட்டைப் பற்ற வைத்த போது ஹோண்டா பாபு வெட்கத்துடன் சொன்னான்: "மாப்ளே.. லவ் பண்றேன்டா..."

ஹோண்டா கோபி ஹீரோ ஹோண்டா பைக் ஏஜென்சி ஒன்றில் விற்பனை அதிகாரியாகப் பணி புரிந்து கொண்டிருந்தான்.

"கங்கிராட்ஸ்.." என்றேன். கூடவே, "பார்த்துறா. என்னை மாதிரியே கடைசில இல்லன்னு ஆயிறப் போவுது. தாங்க மாட்டே..." என்றேன்.

"அவளும் லவ் பண்றேன்னு சொல்லிட்டாடா.." என்றான்.

மாலை கச்சேரிக்கு ஏற்பாடு செய்தேன்.

தற்போது விற்பனையில்...

# 13-ம் ஆண்டு சிறப்பிதழ்!

# 2 புத்தகங்கள்!

## 168 பக்கங்கள்!

**6 புதிய தொடர்கள்**







குமுதம்

# சிநேகிதி

ஜூன் 1-15

இரண்டு லார்ஜுக்குப் பிறகு, "பேரு விஜயதுர்காடா. செல்லமா விஜி. ப்ளெஷர் வாங்கறதுக்காக ஷோ ரூமுக்கு வந்தா. டெஸ்ட் டிரைவ் பண்ணச் சொன்னேன். என்னைப் பின்னால உக்காரச் சொல்லி, ஹாப்பியா கண்ணு விரிய ஓட்டுனா. திரும்பி வரும் போது அவ பின்னால உக்காந்தா. பொண்டாட்டி கூட அப்படி உக்கார மாட்டாடா. இடுப்புல இதோ இந்த எடத்தைத்தான் வளைச்சிப் பிடிச்சிருந்தா. தோள்ல இந்த எடத்திலதான் அழுத்தியிருந்தா. கொடி மாதிரி படர்ந்து வந்தாடா..."



"வண்டி வாங்கினாளா இல்லையா?" என்று மைனர் கோபி சிரித்தபடி கேட்டான்.

"வண்டி வாங்கலன்னா என்ன? லவ் செட்டில் ஆய்டிச்சில்ல?" என்று சிகரெட் புகை கசிய பாபு சொல்ல,

பொறாமையாக இருந்தது.

நான்கு நாள் கழித்து மாலை ஐந்து மணிக்கு பாபு என்னைத் தன் அலுவலகத்துக்கு வரச் சொன்னான். போனேன்.

"நாளைக்கு விஜிக்கு பர்த்டேடா. இந்த பர்ஃப்யூம் பாட்டிலை வாங்கினேன். காந்தி சிலை கிட்ட மீட் பண்றதா ப்ளான். திடீர்னு செங்கல்பட்ல நூறு பைக் டெலிவரி பண்ணணும். பாஸ் கூட கார்ல போக வேண்டிய கட்டாயம். வரமுடியாதுன்னு சொன்னா விஜி கோவிச்சிப்பா. தனியா நின்னுட்டிருப்பா. அவ கிட்ட கொடுத்துடறியா.. ப்ளீஸ்.." என்று கையில் கிஃப்ட் பார்சலைத் திணித்து விட்டுக் கெஞ்சினான் பாபு.

பைக்கை காந்தி சிலை அருகே நிறுத்தி விட்டு பாபு சொன்ன எலுமிச்சை நிற சூடிதாரைத் தேடினேன்.

காந்தி சிலைக்கு நேர் கீழே நின்றிருந்தாள். நெருங்கினேன்.

"ஹலோ விஜி மேடம்.."

திரும்பினாள். நெற்றியில் படர்ந்த 'எஸ்' வளைவு முடியை ஒற்றை விரலால் ஒயிலாக ஒதுக்கிக் கொண்டே மான் விழிகளுடன் என் திலோத்தமை என்னைப் பார்த்தாள்.


பேயறைந்தது போல் இருந்தது!

(தொடரும்)



3





சுபா

# நம்பர் ஊர்வசி மேனகா

**சா**வித்திரி, சகுந்தலா, சந்தியா, சம்யுக்தா.. எதுவும் இல்லை. விஜயதுர்கா!

துள்ளிக் குதிக்கப் போகிறாள் என்று எதிர்பார்த்தேன். கவுன்டரில் டிக்கெட் கிழிப்பவனைப் பார்ப்பது போல் பார்த்தாள்.

"நான் மகேஷ். பாபுவோட ஃப்ரெண்ட்" என்றேன். பாபுவால் ஏன் வரமுடியவில்லை என்பதைக் கூறினேன். பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்தேன். பரிசை வாங்கிக் கொண்டாள். "தாங்க்ஸ்.." என்று விலகி நடந்தாள்.

"என்னை நெஜமாவே தெரியலையா..?"

நின்று, திரும்பி "புரியலையே?" என்றாள்.

"குளக்கரை, கோலப்போட்டி.." என்று முழுக் கதையையும் சொன்னேன்.

சிரித்தாள். "உங்களுக்கு நல்ல இமாஜினேஷன். நான் கொச்சிலேர்ந்து சென்னைக்கு வந்தே நாலு மாசம்தான் ஆகுது. நீங்க அவளை லவ் பண்ணியிருக்கீங்க? கரெக்ட்?"

செம்மறி ஆடு போல் தலையை ஆட்டினேன்.

"அவ உங்க மனசுல ஸ்ட்ராங்கா ரெஜிஸ்டர் ஆயிருக்கா! அதான் யாரைப் பார்த்தாலும் அவளாவே தெரியுது.." என்று கூறிச் சென்றாள்.

பாபுவிடமோ, மற்றவர்களிடமோ விஜியை, திலோத்தமை என்று எண்ணி ஏமாந்ததைக் கூறவில்லை.

அந்த வினோத அனுபவம் நேர்ந்து ஒரு மாதம் கழித்து ஒரு நாள் மைனர் கோபி ஆஃபீஸுக்கு

வந்தான்.

வசீகரமான பேச்சாளி. இன்ஷ்யூரன்ஸ் ஏஜென்ட். காதல், கல்யாணம், குடும்பம், குழந்தை என்னும் செக்கு மாட்டு வாழ்க்கையில் நம்பிக்கை அற்றவன். ஈட்டியதை சினிமா, சியர்ஸ், சிக்கன் என்று செலவழிப்பவன்.

“மச்சி காதல், கண்ணீர், கவிதைல்லாம் பைத்தியக்காரத்தனம்னு இவ்ளோ நாள் நெனைச்சிக்கிட்டிருந்தேன்டா...”

“யார்ரா?” என்றேன் வியப்புடன்.

“அருணாதேவி! என்னை மாதிரிதான். எல்.ஐ.சி. ஏஜென்ட்! டார்கெட் ரீச் பண்றதுக்காக ஒவ்வொரு ஆஃபீஸா ஏறி எறங்கிட்டிருந்தேன். ‘ஸாரி பிரதர்... அருணான்னு ஒரு லேடி கான்வாஸ் பண்ணாங்க. நேத்துத்தான் பாலிசி எடுத்தேன்’னு எல்லா இடத்திலயும் ஒரே பதில். எனக்கு அவ மேல கோவம். ‘என் லைன்ல ஏன் க்ராஸ் பண்றே?’ன்னு அவளை நோண்டி நொங்கெடுக்கணும் போல ஆத்திரம். அட்ரஸ் தெரிஞ்சிக்கிட்டுப் போனேன். சின்ன ஃப்ளாட். அம்மா, அப்பா திருநெல்வேலில. அப்பாவுக்கு பிஸினஸ்ல நஷ்டம். வெளிய தலை காட்றதே இல்லை. அதனால இவ தனியா இங்க வந்து இந்த வேலைல இறங்கினாளாம். பாவமா இருந்தது. அப்படி ஆரம்பிச்ச பழக்கம்தான்டா.”



“கங்கிராட்ஸ். இதைச் சொல்றதுக்காகவா என்னைத் தேடிட்டு வந்தே?”

“இல்லடா. நானும், அவளும் சேர்ந்து கான்வாஸ் பண்றோம்.

ஒன் ஆஃபீஸ்லதான் முன்னூறு பேர் இருக்காங்களே.. ஆளுக்கொரு பாலிசிடா.. ப்ளீஸ்டா.. டார்கெட் ரீச் பண்ணணும். உங்களுக்கும் டாக்ஸ்ல ரிபேட் கெடைக்கும்" என்றான்.

ரிப்போர்ட்டர் வஜ்ரவேல், லேஅவுட் ஆர்ட்டிஸ்ட் சச்சி, அக்கவுண்ட்ஸ் வளர்மதி என்று விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து கொண்டிருந்த நேரத்தில் கோபி விலாவில் குத்தி, "அருணாடா.." என்றான் கிசுகிசுப்பாக.

**"உங்களை மாதிரியே இன்னொருத்தரைப் பாத்திருக்கேன்!"**

நிமிர்ந்தேன். மயங்கி விழாதது என் அதிர்ஷ்டம். ஏனென்றால் அங்கே நின்றிருந்தது திலோத்தமை.. இல்லை, இல்லை. விஜயதுர்கா. பாபுவின் காதலி.

இது எப்படி சாத்தியம்? எனக்குத் தெரியாமல் மண்டையில் அடிபட்டு நடுவுல கொஞ்சம் பக்கம் காணாமல் போய் விட்டதா?

அருணாவை கோபி அறிமுகம் செய்தான். கை கூப்பினாள். பதிலுக்குக் கூப்ப வேண்டும் என்ற நாகரிகம் கூட இல்லாமல் வெறித்தேன்.

புடவை கட்டியிருந்தாள். தலைமுடியைச் சீராக வாரிப் பின்னியிருந்தாள். திலோத்தமைக்கும், விஜிக்கும் நெற்றியில் வந்து விழுந்த அந்த 'எஸ்' கொத்து முடி இல்லை என்பதுதான் ஒரே வித்தியாசம். ஆறு வித்தியாசம் கூடவா இல்லாமல் போகும்!

அருணா கொஞ்சமும் அதிரவில்லை. வாழ்க்கையில் முதல் முறையாகச் சந்திப்பவளைப் போல் நடந்து கொண்டாள்.

"ட்வின்ஸாப் பொறந்திருக்கீங்களா? உங்களை மாதிரியே இன்னொருத்தரைப் பாத்திருக்கேன்.." என்றேன்.

சிரித்தாள். கண்ணாடிப் பாத்திரத்தில் சோழிகள் உருண்டன. "சான்ஸே இல்ல. அம்மா, அப்பாக்கு ஒரே பொண்ணு.. எனக்கு சிஸ்டர் ஒருத்தி இருந்தா எவ்வளவு ஹாப்பியா இருந்திருக்கும் தெரியுமா?" என்றாள். அதே குரல்தானே?

மகாபலிபுரம், எம்ஜிஎம், விஜிபி. என்று இருவரும் சுற்றாத இடமில்லை என்றான் கோபி. இன்கம்டாக்ஸ் பரபரப்பு

முடிந்து திருநெல்வேலி போய் அவளுடைய பெற்றோரைப் பார்த்துப் பேசி விட்டால் கல்யாணம்தான் என்றான். தன் விவகாரத்தை பாபுவிடமோ, ஐயப்பனிடமோ தெரிவிக்க வேண்டாம், கிண்டல் செய்வார்கள் என்றான்.

நான் என்ன செய்ய வேண்டும்? அருணாதான், விஜியா என்பதை ஐயம் திரிபறத் தெரிந்து கொள்ளவேண்டும். பிறகு என்ன நடவடிக்கை என்பதைத் தீர்மானிக்கலாம்.

ஒரு பாலிசி எடுத்தேன். அருணாவுடைய முகவரி, செல்ஃபோன் நம்பர் எல்லாம் வாங்கிக் கொண்டேன்.

மாலை பாபுவிடம், "பாபு. விஜி நம்பரைக் குடேன்.. ஒரு அவசரத்துக்கு ஒன்னைப் பிடிக்க முடியலைன்னா தங்கச்சியைக் கூப்பிட்டுக் கேக்கலாம் பாரு.." என்றேன். விஜியின் செல்போன் எண்ணைக் கொடுத்தான்.

இரண்டும் இரு வேறு எண்கள்.

மறுநாள். ஆஃபீஸுக்குச் செல்லும் வழியில் பொதுத் தொலைபேசியில் விஜியின் எண்ணுக்கு டயல் செய்தேன்.

"யெஸ்.." என்றாள்.

"மேடம். மூணு லட்ச ரூபா பாலிசிக்கு கருணாகரன் ஓகே. சொல்லிட்டாரு. ஆஃபீஸுக்கு வந்துடறீங்களா? செக்கை வாங்கிட்டுப் போய்டலாம்.." என்றேன்.

"ராங் நம்பர்.." என்று வெட்டினாள். அருணாவை அழைத்தேன்.

'வணக்கம். நான் அருணாதேவி. ஆயுள் காப்பீடு முகவர். என்னிடம் ஒரு பாலிசி எடுத்துக் கொண்டால் உங்களுக்கு வருமான வரியில் விலக்கு கிடைக்கும்..' என்று பதிவு



செய்யப்பட்ட குரல் ஒலித்தது.

நானே வெட்டிக் கொண்டேன். தலை சுற்றியது.

பதினைந்து நாட்கள் வேலையில் மனதைச் செலுத்தினேன். இருந்தும் குடைச்சல் தாங்கவில்லை. இதிலெல்லாம் பாதிக்கப்படாத ஐயப்பனிடம் யோசனை கேட்டால் என்ன?

ஐயப்பன் சுற்றுலா நிறுவன நிர்வாகி. நான்கு நாள் ஷீர்டி போவான். அடுத்த வாரம் ஆந்திரக் கோயில்களுக்கு விசிட் அடிப்பான். திடீரென்று காசி, கயா என்று இருபது நாட்களுக்குக் காணாமல் போவான்.

> **"என் ஆளுடா. பத்து நாள் ரூல லவ் ஆயிடிச்சி!"**

அவனை போனில் அழைத்து, "எங்கடா இருக்கே?" என்று கேட்டேன்.

"பஞ்சதுவாரகா. நாலு நாள்ல வந்துருவேன், ஏதாவது முக்கியமான விஷயமா மாப்ளே?"

"இல்ல. சென்னை வந்ததுக்கப்புறம் பேசிக்கலாம்."

ஞாயிற்றுக்கிழமை முற்பகல் ஐயப்பன் அறைக்குள் நுழைந்தான். அவன் வந்த நேரம் பாபு இல்லை. கோபியும் இல்லை. நல்ல சந்தர்ப்பம்.

"கிளம்புடா மாப்ளே. இந்தத் தடவை டூருக்கு அழைச்சிட்டுப் போன குரூப் நல்லபடியா திரும்பி வந்தா அன்னதானம் பண்றதா வேண்டிட்டிருக்கு. வடை பாயசத்தோட விருந்து. வா" என்று என்னை இழுத்துக் கொண்டு இறங்கினான்.

காத்திருந்த வேனில் ஏறினோம். உள்ளே நான்கு பேர் அமர்ந்திருந்தார்கள். வேன் கிளம்பியதும், "அரோகரா. ஓம் நமச்சிவாய.கோவிந்தா, கோவிந்தா!" என்று எட்டுக் கட்டையில் குரல் எழுப்பினார்கள். தூக்கிவாரிப் போட்டது.

கபாலி கோயிலை ஒட்டிய கல்யாண மண்டப வாசலில் வேன் நின்றது.

உள்ளே டேபிள், சேர் போட்டு ஆணும், பெண்ணுமாக நூற்று ஐம்பது பேர் முதுகு காட்டி வரிசையாக அமர்ந்திருந்தார்கள்.

ஐயப்பன் என்னைத் தரதரவென்று இழுத்துப் போனான். வரிசையின்

**இளமை, புதுமை**
**எதிலும் முதன்மை**

நிறுவிய ஆசிரியர்
**எஸ்.ஏ.பி.**

நிறுவிய பதிப்பாளர்
**பி.வி. பார்த்தசாரதி**

சேர்மன் மற்றும் நிர்வாக இயக்குநர்
**பா. வரதராசன்**

அச்சிட்டு வெளியிடுபவர்
**பா. வரதராசன்**

குமுதம் ஆசிரியர்
ச. கோசல்ராம்

ஆசிரியர்
க. ராமச்சந்திரன்
(ப்ரியா கல்யாணராமன்)

பொறுப்பாசிரியர்
இரா. மணிகண்டன்

துணை ஆசிரியர்
இளையரவி

துணைத் தலைமை நிருபர்
அன்வர்

உதவி ஆசிரியர்
கடற்கரய்

நிருபர் குழு
வீரகேரளம் சரவணன், சிந்துகுமார்,
அரண்மனை சுப்பு, அரவிந்த்,
ஜோசப், கார்த்திகேயன்.

புகைப்படக் கலைஞர்கள்
சித்ராமணி, ஆர். சண்முகம்

**குமுதம் பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட், பழைய எண்.151 புதிய எண்.306, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-10ல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.**

கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. கதை, கட்டுரை முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும், கருத்துக்களைச் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. பிரசுரமாகும் கதை, கட்டுரை மற்றும் படைப்புகள் அனைத்திற்கும் பதிப்பாளரே உரிமையாளராவார். மறுபிரசுரம் செய்யவோ, மற்ற வேறு வகையில் படைப்புகளை பயன்படுத்தவோ நிர்வாகத்தினரின் முன் அனுமதி பெற்றே செய்ய வேண்டும்.

பிரசுரிக்கத் தேர்ந்தெடுக்கப்படும் படைப்புகளுக்கு பி.ஆர்.பி சட்டப்படி ஆசிரியர் குழுவே பொறுப்பு.

கதை, கட்டுரைகள் அனுப்ப வேண்டிய முகவரி :
தபால் பெட்டி எண் : 2592, சென்னை 600010.
**தொலைபேசி எண் : 26422148**
**ஃபேக்ஸ் எண் : 26425041**
**இ-மெயில் : edtl@kumudam.com**

கோடியிலிருந்து இரண்டாவதாக, பாவாடையும், சட்டையும் அணிந்து அமர்ந்திருந்த பெண்ணின் பின்னால் நின்றான்.

"சுஜா.." என்று காதல் ஒழுக அழைத்தான்.

அவள் திரும்புவதற்குள், ஜயப்பன் என் முகவாயைப் பற்றித் திருப்பி, "என் ஆளுடா. பத்து நாள் டூர்ல லவ் ஆயிடிச்சி. ஒவ்வொரு கோயில்லயும் கும்பிட்டு அவளுக்கு நான், எனக்கு அவங்கறதை சாமி முன்னால உறுதிப்படுத்திக்கிட்டோம். துவாரகை கிருஷ்ணன் சன்னதியிலயே தாலி கட்டச் சொல்லி சுஜா சொன்னா. நான்தான் அவங்கம்மா ஆசிர்வாதத்தோட இங்க ஏதாவது கோயில்ல கல்யாணத்தை வச்சிக்கலாம்னு சொல்லிட்டேன்.." என்றான்.

அப்போதுதான் சுஜாவைப் பார்த்தேன். பாபுவுக்கு விஜியாகவும், கோபிக்கு அருணாவாகவும் அவதாரம் எடுத்திருந்த அதே திலோத்தமை, ஜயப்பனுக்காக சுஜாவாக அவதரித்திருந்தாள்.

மயங்கிச் சரிந்தேன்.

**(தொடரும்)**

முகத்தில் தண்ணீர்ச்சாரல் பட்டு விழித்தேன். "என்னடா ஆச்சி?" என்றான் ஐயப்பன் கவலையுடன்.


"பசி மயக்கம்..." என்று முனகினேன்.

சாப்பிட்ட பின் வெளியே வந்து தெரிந்த மனநல மருத்துவர் ஒருவரைப் பார்த்தேன்.

"டாக்டர். எனக்குப் பைத்தியம் பிடிச்சிருக்கா, இல்ல பிடிக்கப் போவுதான்னு செக் பண்ணிச் சொல்ல முடியுமா?"

டாக்டர் கையில் இருந்த பென்சிலைத் தவறவிட்டார். "என்ன சொல்றீங்க மகேஷ்?"

திலோத்தமையே, விஜியாகவும், அருணாவாகவும், சுஜாவாகவும் காட்சி அளித்த



# ரம்பா ஊர்வசி மேனகா

கதையைச் சொன்னேன்.

டாக்டர் ஸ்டெதாஸ்கோப்பால் ஒற்றி எடுத்தார். முட்டி தட்டிப் பார்த்தார். சுடோகு புதிரை விடுவிக்கச் சொன்னார். வெவ்வேறு வடிவ அட்டைத் துண்டுகளைக் கொடுத்து கோர்க்கச் சொன்னார்.

"புத்தி பேதலிப்பு, சித்தப்பிரமைன்னு உங்களுக்கு எதுவும் இல்ல. முதல்ல திலோத்தமையைக் கண்டு பிடிக்கற வழியைப் பாருங்க. அப்புறம் விஜி, அருணா, சுஜால்லாம் யாருன்னு தெரிஞ் சிடும்..."

குமுதம் சினேகிதி நடத்திய கோலப்போட்டியில்தானே திலோத்தமையைப் பார்த்தேன்?

குமுதம் சிநேகிதியில் பணிபுரியும் நண்பர் ஒருவரைத் தெரியும். ஃபோனில் "மார்கழி மாசக் கோலப் போட்டில ஒரு பொண்ணு தொடர்ந்து ப்ரைஸ் தட்டிட்டே இருந்தாளே..?" என்று ஆரம்பிப்பதற்குள், "சந்தியா!" என்றார் பளிச்சென்று!

அட! "யெஸ்..சந்தியா! அவங்க அட்ரஸ் வேணுமே! சப்ளிமெண்ட்ரில ஒரு இன்டர்வியூ..."



முப்பதாவது வினாடி சந்தியாவின் முகவரி என் கையில். பிரஷர் எகிறியது.

பீமண்ணன் தோட்டத்தில் அந்த வீட்டை நெருங்கிய போது வாசலில் ஆம்புலன்ஸ் நின்றிருந்தது.

ஸ்ட்ரெச்சரில் சந்தியாவைக் கிடத்தி வந்து ஆம்புலன்ஸில் ஏற்றினார்கள். கூடவே சந்தியாவின் ஜாடையுடன் ஒரு பெண்மணி ஏறினாள். சைரனுடன்

ஆம்புலன்ஸ் நகர்ந்தது.

"சந்தியாவுக்கு என்னக்கா?" என்று அருகில் நின்றிருந்த ஓர் அக்காவைப் பதைப்புடன் கேட்டேன்.

"அடிவயித்துல வலி. மயங்கி விழுந்துடிச்சி. கூட குமுதா போயிருக்கா.."

"எந்த ஆஸ்பத்திரி?"

"தெரியாதேப்பா..."

என்னையறியாமல் சந்தியாவின் மீது இரக்கம் சுரந்தது. அதுதான் வீடு தெரிந்து விட்டதே. இரண்டு நாட்களில் உண்மை தெரிந்து விடப்போகிறது!

அலுவலகம் சென்றேன். கோபி காத்திருந்தான். மடிக்கப்பட்ட ஒரு காகிதத்தை நீட்டினான்.

அருணா எழுதியிருந்தாள். மறுநாள் காலை குருவாயூர் எக்ஸ்பிரஸ்ஸில் மதுரைக்குப் போய் புடவை, தாலி வாங்கிக் கொண்டு திருநெல்வேலிக் கோயிலில் பெற்றோர் முன்னிலையில் திருமணம்!

செல்ஃபோன் தண்ணீரில் விழுந்ததால் கடித விடு தூதாம்!

ஐயப்பன் டூர் போயிருந்தான். பாபு ட்ரெய்னிங்குக்கு மும்பை போயிருந்தான். நான்தான் மாப்பிள்ளைத் தோழன்! அடுத்த நாள் காலை ஏழு மணிக்கே எழும்பூர் சென்று விட்டோம்.

பிளாட்ஃபாரத்தில் ரயில் நின்றிருந்தது. நிமிடங்கள் டிக், டாக் என்று நகர்ந்தன. அருணாவைக் காணவில்லை.

கோபி ஓடி, ஓடித் தேடினான். கூட்டத்தில் எந்த செல்ஃபோன் ஒலித்தாலும் தன்னுடையதைப் பார்த்துக்கொண்டான்.

ரயில் 'பாங்க்க்' என்று அலறி நகர்ந்தது. பிளாட்ஃபாரம் காலி!

அருணாவின் ஃப்ளாட்டுக்குச் சென்றோம். வேறொரு பெண் கதவைத் திறந்தாள். "யாரும்மா?" என்று கேட்டுக் கொண்டே அவளுடைய அம்மாவும், அப்பாவும் வந்து நின்றார்கள்.

"இங்க அருணான்னு..?"

"நான்தான்..! பாலிசி போடணுமா..?"

"இங்க நேத்து வரைக்கும் வேற ஒரு பொண்ணு இருந்தாளே. அவங்க அம்மா, அப்பா கூட திருநெல்வேலில இருக்காங்களே..."

"என் அஸிஸ்டெண்ட் சந்தியாவைச் சொல்றீங்கன்னு நெனைக்கறேன். இதான் எங்க அம்மா, அப்பா. இவங்களைக் கூட்டி வரத்தான் திருநெல்வேலி

போயிருந்தேன். திரும்பி வர ஒரு மாசம் ஆகுங்கறதால வீட்ல சந்தியாவை இருக்கச் சொன்னேன். நான் திரும்பி வரதுக்குள்ள சாவியைப் பக்கத்து ஃப்ளாட்காரங்க கிட்ட கொடுத்துட்டுப் போயிருக்கா. லூசு!"

முகத்தில் கரியுடன் சாலைக்கு வந்தோம். "கோபி. ஒரு விஷயம் சொல்றேன். கோச்சிக்காத. விஜின்னு ஒருத்தியை பாபு லவ் பண்றான்ல? அது வேற யாருமில்லை. அருணாதான்" என்றேன்.

"என்னது?" என்றான் முகம் சிவக்க. "ஏண்டா எங்கிட்ட முன்னாலயே சொல்லலை. எனக்குக் கெடைச்ச வேலையை அவனுக்கு விட்டுக் கொடுத்தேன். பைக் வாங்கறதுக்குப் பணம் கொடுத்தேன். காசைச் சுருட்டுனான். வேலையைப் புடுங்குனான். இப்ப என் ஆளையும் கொத்திட்டுப் போகப் பாக்கறானா? அவனைக் கொன்னாத்தான்டா மனசு ஆறும்.." என்று கத்தினான். செல்லில் பாபுவை அழைத்தான்.

தொடர்பு கிடைக்கவில்லை. "மும்பை போயிருக்கான்டா.." என்று சமாதானப்படுத்தினேன்.

அறைக்குத் திரும்பினோம். பாபு தரையில் கிடந்தான். அருகில் விஸ்கி பாட்டில் உருண்டிருந்தது.





எழுப்பினேன். மலங்க, மலங்கப் பார்த்தான். "டேய், விஜி ஏமாத்திட்டாடா. உங்க கிட்ட மும்பை ட்ரெய்னிங்னு சொல்லிட்டு 'எனக்காகக் காத்திருக்கேன்'னு சத்தியம் பண்ண விஜியைத் தேடிக் கொச்சினுக்குப் போனேன். அவ கொடுத்திருந்த அட்ரஸ் தப்பு. யாரோ ஒருத்தன்கிட்டேர்ந்து ஃபோன் வருது. பேரு ராஜேந்திரனாம். அவனுக்கும், விஜிக்கும் கோவால கல்யாணம் ஆய்டிச்சாம். இனிமே விஜி, கிஜின்னு தேடிட்டு வந்தே கொன்னுடுவேன்னு மெரட்னான்டா."

அடுத்த நாள் பெங்களூர் ஆஸ்பத்திரி ஒன்றில் இருந்து ஃபோன் வந்தது. தூக்கு மாட்டி தற்கொலைக்கு முயன்ற ஐயப்பனை



**"மன்னா... தங்களைப் புகழ்ந்து பாடுவதற்கு பதில் சாமரம் வீசட்டுமா?"**

**"ஏன் புலவரே?"**

**"கை வலித்தாலும் பரவா யில்லை.. பொய் சொல்ல நா கூசுகிறது மன்னா..."**

**- பர்வீன் யூனுஸ்**

யாரோ கொண்டு போய் சேர்த்திருக்கிறார்கள்.

காரில் ஐயப்பனைக் கூட்டி வந்தோம். அவன் சுஜா எழுதிய கடிதத்தைக் காட்டினான், 'என்னை மறந்து விடவும். எனக்கும் சுகுமாரனுக்கும் நேற்று கல்யாணம் நடந்து முடிந்து விட்டது.'

மூன்று பேரிடமும் முழுக் கதையையும் கூறினேன். காரை சந்தியாவின் வீட்டுக்கு விடச் சொன்னேன் கதவில் பூட்டு தொங்கியது.

"விடியக்காலைல லாரி வந்தது. வீட்டைக் காலி பண்ணிட்டு எல்லா சாமான்களையும் வாரிப் போட்டுக்கிட்டு சந்தியாவும், குமுதாவும் போய்ட்டாங்களே.." என்றாள் அக்கா!

எங்கே போனார்கள்? தெரியாது. மாயமாகி விட்டார்கள்!

பாபு விவசாயம் பண்ண சொந்த ஊருக்குப் போனான். கோபி குடியில் சிக்கிச் சீரழிந்து காணாமல் போனான். ஐயப்பன் பெங்களூரில் ஒரு சுற்றுலா நிறுவனத்தை நிர்வகிக்கப் போனான். தொடர்பு அறுந்தது. அம்மா, அப்பா பார்த்துப் பேசி வர்ஷா எனக்குச் சொந்தமானாள்.

குமுதா ஆன்ட்டி பிழைத்து விட்டாள். என்னைப் பார்த்து கர, கரவென்று கண்ணீர் விட்டாள்.

"மகேஷ்.. உண்மை தெரிஞ்சா ஒனக்குச் சிரிப்பா வரும். ஆத்திரமா வரும். இருபத்தோரு வயசு வரைக்கும் சந்தியா பெரிய மனுஷி ஆகல.

அவ ஆம்பிளங்களோட நெருங்கிப் பழகுனா அந்தக் கிளர்ச்சியில அவளோட ஹார்மோன் சுரப்பிங்கல்லாம் முழிச்சிக்கிட்டு வேலை செய்யும். அப்புறம்தான் அவ பொண்ணா மாறுவா. ஏமாந்த சோணகிரிங்க யாராவது சிக்கறாங்களான்னு பாருங்கன்னு ஒரு சைக்கியாட்ரிஸ்ட் அட்வைஸ் பண்ணாரு.

கோலப்போட்டில ஒன்னைப் பாத்தேன். விசாரிச்சேன், ஒன் ஃப்ரெண்ட்ஸ் பத்தியும்

தெரிஞ்சிக்கிட்டேன். நான்தான் சந்தியாவை விஜியா, அருணாவா, சுஜாவா மாத்துனேன். அவளுக்கு அதில விருப்பமே இல்லை. செத்துருவேன்னேன். ஒத்துக்கிட்டா. உங்க கூடல்லாம் பழகினா. டாக்டர் சொன்னபடி நடந்தது. திடீர்னு ஒரு நாள் அடிவயித்துல வலி. ஆஸ்பத்திரில சேர்த்தேன். சந்தியா பெரிய மனுஷி ஆயிட்டா. அந்தமான்ல சந்தியாவோட மொறைப்பையன் காத்திட்டிருந்தான். அவனுக்குக் கப்பல்ல வேலை. யார் கிட்டயும் சொல்லாம இங்க வந்தோம். சந்தியாவுக்குக் கல்யாணம் நடந்தது. ரெண்டு வயசுல அவளுக்கு ஒரு பையன்! என்ன தண்டனை வேணும்னாலும் எனக்குக் கொடு. சந்தியாவை விட்டுடு. ஒன்னை என் பிள்ளையா நெனைச்சிக் கேக்கறேன். வர்ஷாவும், நீயும் நூறு வருஷம் சந்தோஷமா வாழணும். முத்து முத்தா கொழந்தைங்க பொறக்கணும்..சொல்லும்மா ஒன் புருஷன் கிட்ட..." என்று குமுதா ஆன்ட்டி வர்ஷாவின் கைகளைப் பிடித்துக் கெஞ்சினாள். வர்ஷாவின் கண்களில் கண்ணீர்.

ரம்பாவாக, ஊர்வசியாக, மேனகாவாக மாறிய சந்தியாவின் மீது பரிதாபம்தான் மிஞ்சியது.

ரன்வேயில் சீறிவிட்டு விமானம் ஜிவ்வென்று மேலே எழுந்தது. எப்படியாவது பாபுவையும், கோபியையும், ஜயப்பனையும் தேடிக் கண்டுபிடித்து உண்மையைச் சொல்லி அவர்களைச் சமாதானப் படுத்த வேண்டும். வர்ஷா என் மனதைப் படித்து விட்டாள்.

"அதான் சரி." என்று சொல்லியபடி என் மேல் சாய்ந்து கன்னத்தில் ஈர இதழ்களை 'பச்சக்' என்று பதித்தாள்.●

(முற்றும்)

